# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## எந்த நெருக்கத்திலும், உடைந்து போகாத ஓர் மண்பாண்டம்!

பரித்தாவியின் அபிஷேகம் நமக்குள் செய்திட விரும்பும் உன்னதமான செயல் ஒன்று உண்டு! அந்த செயலுக்கு அவர் அளிக்கும் வல்லமைக்கு ''மகத்துவமுள்ள வல்லமை'' என 2கொரிந்தியர்.4:7 கூறுகிறது! ஆம், இயேசுகிறிஸ்துவின் மகிமையை அல்லது அவர் பெற்றிருந்த திவ்ய சுபாவத்தை ''பொக்கிஷமாய்'' மண்பாண்டமாகிய நம் இருதயத்தில் பெற்றுக்கொள்ளவே பரிசுத்தாவியின் 'மகத்துவமுள்ள வல்லமை' கிரியை நடப்பிக்கிறது! வாழ்வின் அனேக நெருக்கங்களில், சிலுவையின் வழி நடந்து, இந்த மகத்துவ வல்லமை நமக்குள் நடப்பிக்கும் கிரியையின் மூலம் ''பொக்கிஷத்தை'' தங்கள் 'மண்பாண்டத்தில்' பெற்றவர்களே ''கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை'' கண்டடைந்தவர்கள்! (வச.4).

இந்த பாக்கியமான சுவிசேஷத்திற்குரிய அனைவருக்கும், பரிசுத்த ஆவியானவர் அருளும் ஆச்சரியமான சிலாக்கியம் ஒன்று உண்டு! இவர்கள் சந்தித்த வாழ்வின் நெருக்கங்கள், இவர்களை ஒடுங்கச் செய்வதில்லை! கலக்கமான யாதொரு சூழ்நிலைகளும், இவர்களை மனமுறிவடையச் செய்வதில்லை! .... இந்த உலகத்தாரின் 'இருதயமாகிய மண்பாண்டங்கள்' அனைத்தும் துன்பத்தில் நெருங்குண்டு போக, சுவிசேஷம் அருளிய பொக்கிஷத்தை தங்கள் 'மண்பாண்டத்தில்' பெற்றவர்களின் இருதயமோ எக்காலத்தும் கலங்குவதுமில்லை, மனமுறிவடைவதும் இல்லை! ஆம், அவர்களின் இருதயம் 'உடைந்து போகாத' மண்பாண்டம்! அல்லேலூயா.

-tr

பெட்டகம் 19 ஜுன் 2017 பரல்கள் 6



## 'தனிமையில்' கர்த்தரைத் தேடி 'விசாரிக்கும்' யாக்கோபின் சந்ததி!

கர்த்தரைத் தேடி, விசாரித்து.... அவருடைய **சமூகத்தை நாடும்** சந்ததி ஒன்று உண்டு! அந்த சந்ததிக்கே "யாக்கோபு என்னும் சந்ததி" என்ற பாக்கியமான பெயர் சூட்டப்பட்டுள்ளது! (சங்.24:6). யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? (வசனம்.3) என்ற கேள்விக்கு, அவர் சமூகத்தை நாடும் யாக்கோபின் சந்ததியரே கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவர்! என்ற விடை தெளிவாய் உள்ளது. கர்த்தருடைய பர்வதம் ஏறுபவர்களுக்கு நடைபெறும் மிகப்பெரிய செயல்தான் "பரிசுத்தமாகுதலின்" செயல்! கர்த்தருடைய சமூகத்தை மறைக்கும்.... தங்கள் கரங்களில் தோன்றிய அசுசிகளையும், இருதய மாசுகளையும், தீவிரமாய் தங்களை தேவனுக்கு முன்பாக நியாயந்தீர்த்து சுத்திகரித்துக்கொள்கிறார்கள்! இதைத் தொடர்ந்து, தங்கள் ஆத்துமாவின் மாயைகளையும், நாவின் கபடுகளையும் அவர் சமூகத்தில் கழுவி சுத்திகரித்துக் கொள்கிறார்கள்.

இவ்வாறு, கர்த்தருடைய பர்வதத்தில் தங்களை சுத்திகரித்துக்கொண்ட இவர்களே, அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் **"தங்கி நிலைத்திருக்கும்"** அதிகமான பாக்கியத்தைப் பெறுகிறார்கள்! (வச.3,4). இவர்களை 'ஆசீர்வதிக்கவே' கர்த்தர் அவர்களிடம் வருகிறார் (வசனம்5). ஆம், வாசல்களே.... அநாதி கதவுகளே உயருங்கள், இதோ 'மகிமையின் ராஜா' உட்பிரவேசிக்கிறார்! என்ற கெம்பீர தொனியான அவர் சமூகத்தின் பாக்கியமும், கர்த்தருடைய பர்வதத்திற்கு ஏறிடும் யாவருக்கும் நிச்சயமாய் கைகூடும்! (வசனம்.7).

இவ்வாறு நாள்தோறும் அவரது சமூகத்தைத் தேடி, தங்களை அவரது சமூகத்தில் விசாரித்து வரும் யாக்கோபின் சந்ததியர்.... "என் சித்தம் வேண்டாம், உம் சித்தம்!" என தனிமை தேடி, தன்னைப் பிதாவுக்கு முன்பாக நாள்தோறும் விசாரித்த இயேசுவின் அடிச்சுவடு கண்டவர்கள்!

*-Ed*


**பரலோக பொக்கிஷங்கள்**

வருடசந்தா ரூ.120.00 ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.100.00

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
Savings a/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306, (H) 0452 - 2661177
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, cfcindia.com/tamil

## 'பணவிஷய – உண்மை' உத்தம ஊழியத்தின் ஆதாரம்!

**லூ**க்கா 16 முதல் 21 அதிகாரம் வரை பணத்தைக் குறித்த போதனைகள் தரப்பட்டுள்ளது. பணத்தைக் குறித்து இயேசு ஏராளமாய் பேசியிருக்கிறார். சுவிசேஷங்களில், இயேசுவின் போதனையில் 16% பணத்தைக் குறித்து இருப்பதை நீங்கள் காணலாம். அதாவது ஒவ்வொரு **ஆறு வசனங்களில் ஒரு வசனம் பணத்தைக் குறித்து** பேசப்பட்டிருப்பது ஆச்சரியமாய் இருக்கிறதல்லவா? அப்படி ஒரு முக்கியத்துவத்தை, பணத்தின் போதனைக்கு இயேசு தந்துள்ளார்.

> **இவ்வாறு பணத்தின் மீதுகொண்ட பிரியத்திலிருந்து ஜனங்கள் விடுதலை பெற்றிருக்க இயேசு அழைத்த அதே சமயத்தில், இன்றைய திரளான பிரசங்கிகள் ஜனங்களைப் பார்த்து "உங்கள் தசம பாகத்தை செலுத்துங்கள்" என்றே நெருக்குகிறார்கள்.**

அவ்வாறு செய்வதற்கு, இயேசு தன் சீஷர்களுக்கு ஒருபோதும் கற்றுக் கொடுக்கவில்லை. பழைய உடன்படிக்கை அடிப்படையில் வாழ்ந்த 'பரிசேயர்கள் அதைச் செய்யட்டும்' என்றே கூறினார் (மத்தேயு.23:23).

இயேசு கூறிய முதலாவது உவமையில் 'ஓர் அநீதியான உக்கிராணக்காரனை' பற்றிப் பேசினார். இந்த உவமையின் சாரம் என்னவென்றால், அவன் தன் எதிர்காலத்திற்காக திட்டமிட்டான் என்பதேயாகும். தன்னுடைய வேலையை தான் இழக்கப்போவதை அவன் அறிந்திருந்தான். ஆகவே, சில ஏமாற்று தந்திரங்களைச் செய்து தன் வேலை போனாலும், தான் வசப்படுத்திய சிநேகிதர்கள் மூலமாய் மற்றொரு வேலையை பெற்றுக்கொள்ளலாம் என நம்பியிருந்தான். இந்த இடத்தில் இயேசு கூறும்போது "அநீதியான உலகப்பொருளால் **நித்தியத்திற்கென்று சிநேகிதரை சம்பாதியுங்கள்**" என போதித்தார். அந்த உக்கிராணக்காரனுக்கு, அவனுடைய எதிர்காலம் பூமிக்குரியதாக மாத்திரமே இருந்தது. நமக்கோ, நம்முடைய எதிர்காலம் நித்தியத்திற்குரியதாய் இருக்கிறது. அவன் தன்னுடைய எதிர்காலத்தை அவன் வைத்திருந்த பணத்தின் வல்லமையைக் கொண்டு ஆயத்தம் செய்தான். **நாமும் நித்தியத்திற்கென்று சிநேகிதரை, பணத்தின் மூலமாய் சுவிசேஷத்தைப் பரப்பி ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய** வேண்டும். அப்படிச்செய்தால், ஒருநாளில் ஜனங்கள் பரலோகத்தில் உங்களைச்

சந்தித்து "சுவிசேஷத்தின் பிரபல்யத்திற்காக நீங்கள் பணத்தை செலவழித்ததினிமித்தம் நான் இரட்சிக்கப்பட்டு இப்பொழுது பரலோகத்தில் இருக்கிறேன்" என உங்களைப் பார்த்து மகிழ்வுடன் கூறுவார்கள் (லூக்கா.16:9).

அதன் பின்பு இயேசு, கீழ்க்கண்ட வெகு வலிமையான வார்த்தைகளைப் பேசினார்:

"அநீதியான உலகப்பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?" (லூக்கா.16:11).

மெய்யான ஐசுவரியம் என்பது திவ்விய சுபாவமும், பரிசுத்த ஆவியில் நிறைந்த அபிஷேகமும், தேவனுடைய வசனத்தின் மீது கொண்ட வெளிப்பாடுமேயாகும். இன்று ஏன் அநேக விசுவாசிகளின் சம்பாஷணை கிறிஸ்துவைப்போல் இல்லை அல்லது தேவனுடைய வார்த்தையில் அவர்களுக்கு ஆவியானவர் மூலமாய் புதிதான வெளிப்பாடு இல்லை? அதுஏனென்றால், அவர்கள் பணவிஷயத்தில் உண்மையாய் இல்லை, அவ்வளவுதான்!

பின்பு இயேசு தொடர்ந்து கூறுகையில் "எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக்கூடாது" என கூறினார் (லூக்கா.16:13). ஆகவே நீங்கள்தான் இந்த இடத்தில் உங்கள் நிலையை தெரிந்துகொள்ள வேண்டும். இந்த பரிசேயர்கள் பல்வேறு "மிஷனெரிபணிகள்" வைத்திருந்தார்கள். ஆனால் அதே சமயம் 'பொருளாசைக்காரராயும் இருந்தார்கள்' (லூக்கா.16:14). அவர்களைப் பார்த்து இயேசு கூறும்போது "நீங்கள் மனுஷர் முன்பாக (ஆவிக்குரியவர்களைப் போல்) உங்களை நீதிமான்களாக காட்டு கிறீர்கள். ஆனால் தேவன் உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார். மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாய் இருக்கிறது" என்றார் (லூக்கா.16:15). இந்த வசனத்தை எனக்கு முன்பாக எப்போதும் வைத்திருக்கிறேன். என் ஜீவ காலமெல்லாம் இடைவிடாது நினைவுகூர விரும்புகிறேன்.

மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுவது அனைத்தையும் ஒரு பட்டியலாய் போட்டுப்பாருங்கள்.... பின்பு, அவை அனைத்தையும் 'அருவருப்பாகவே' தேவன் எண்ணுகிறார் என்பதை மனதிற்கொள்ளுங்கள்.

மனுஷர் உயர்வாய் மதிப்பிடும் யாதொன்றைக் குறித்தும் மேன்மைப்பாராட்டாதிருக்க ஜாக்கிரதை கொண்டிருங்கள். அதுபோன்ற மேன்மையான பொருட்கள் உங்களிடத்தில் இருக்கலாம். ஆனால் அதற்குரிய மதிப்பை **தேவன் மதிப்பிடுவது போலவே** 'பூஜ்யம்'

என்றே நீங்களும் மதிப்பிடுங்கள். எந்த உலக மேன்மையை குறித்தும் மனதில் வைத்து சிந்திக்காதிருங்கள். நீங்கள் பார்ப்பதற்கு அழகும் அல்லது புத்திகூர்மையும் அல்லது பணக்காரரும் அல்லது உயர்ந்த படிப்பு தகுதியும் உடையவராய் இருக்கிறீர்களோ? இவைகளை நீங்கள் உடையவர்களாய் இருப்பதில் யாதொரு தவறும் இல்லை. ஆனால், இவைகள் மீது யாதொரு மதிப்பும் தேவன் வைத்திருக்கிறார் என கற்பனை கூட செய்யாதீர்கள்! ஏனென்றால், இவ்வுலகில் வாழ்ந்த ஏராளமான தேவபக்தியான பரிசுத்தவான்கள் அழகுள்ளவர்களாய் இருந்ததில்லை! அல்லது அறிவாளிகளாகவோ, பணக்காரர்களாகவோ அல்லது தகுதி வாய்ந்த கல்விமான்களாகவோ இருந்ததில்லை. தேவன் மதிப்பிடுவதெல்லாம், **தாழ்மையும் அவர்மீது கொண்ட பயபக்தியுமே** ஆகும். ஆகவே நீங்களும், தேவன் மதிப்பிடுவதைப் போல உங்களால் மதிப்பிட முடியுமென்றால், தேவனுக்கு நீங்கள் செய்யும் ஊழியம் சீரும் சிறப்புமாய் இருக்கும்!

– சகரியா பூணன்

---

## "என்னை ஆசீர்வதித்திட வரும் சிலுவையே" வருக!

எனது மாமியாரும், வேலைக்கார பெண்ணும், என் கணவரும் எப்போதும் என்னைச் சூழ நின்று கொண்டு என் வார்த்தைகளையும், என் செய்கைகளையும் கூர்மையாய் கண்காணித்து என்மீது குற்றம் சுமத்த வகை தேடினார்கள்! 'ஏன் இப்படி நடக்கிறது' என நான் ஆச்சரியப்பட்டேன். ஒவ்வொரு நாளும், அந்த நாள் முழுவதும்.... ஏதாகிலும் ஒரு குறையை திரும்ப திரும்ப என் மீது ஓயாது சுமத்திக்கொண்டே இருந்தார்கள். என் மாளிகையிலிருந்த எல்லா வேலைக்காரர்களுக்கு முன்பாகவும் என்னை சிறுமைப்படுத்த அவர்கள் தயங்கவில்லை.

இந்த உலகத்திலேயே 'நானே பயங்கர குற்றவாளி போல்' சுமத்திய குற்றசாட்டுகள் என்னையும் அறியாமல் என் உணவை கண்ணீரால் நனைத்தது.

ஒரு விந்தையான துன்பத்தை போலவே நான் சந்தித்தேன். என் கண்ணீரை ஒரு ஓரத்தில் கண்ட அவர்கள், **இனி இவள் அழிந்தாள்** என கூறினார்கள். நான் சற்று முனுமுனுத்து மகிழ்ச்சியான பாடல் பாடிய போது "அப்படியொரு மகிழ்ச்சிக்கு என்ன காரணம்?" என வெறுப்புடன் கேட்டார்கள். நான் அமைதியாய் இருந்த நேரங்களில், "உன் உள்ளத்தில் கோபத்தை புதைத்து வைத்திருக்கிறாய்" என என்மீது பொருமினார்கள். அவர்களின் சம்பாஷணையிலுள்ள ஒரு காரியத்தை 'உனக்கு தெரியுமா?' என கேட்பார்கள். 'எனக்கு தெரியும்!' என நான்

கூறினால் 'அதை ஏன் எங்களுக்கு முன்கூட்டியே' கூறவில்லை? என என்னை குதர்க்கம் செய்தார்கள். சில நல்ல விடைகளை நான் அவர்களுக்கு கூறினால்.... 'இந்த விஷயத்தை நீ திரித்து கூறுகிறாய்' என என்மீது பொரிந்தார்கள். கிட்டதட்ட ஒரு மாத காலமாய் நான் உட்காருவதற்கு கூட நேரமில்லாமல், நான் அந்த வீட்டு எஜமானி என்பதையும் புறக்கணித்தவர்களாய், அனேக வேலைக்காரர்கள் இருந்தும், பல வேலைகளை என்மீது திணித்தார்கள். சில இரக்கமான என் பணிப்பெண்கள் என்னிடம் வந்து "இளவரசி, உங்களுக்கு சுகவீனம் வந்ததுபோல் பாசாங்கு செய்யுங்கள். அப்போதுதான் உங்களுக்கு சற்று இளைப்பாறுதல் கிடைக்கும்" என பரிவோடு கூறினார்கள். நானோ அதற்கு இணங்கவில்லை. இவர்கள் கூறிய மாயமான ஒய்வை விட **'தெய்வ அன்பு' என்னை நெருக்கமாய் மூடி பாதுகாத்துக்கொண்டது!** ஒருசில சமயங்களில் "என்னை அழுத்தும் பாரங்களை யாராவது ஒருவரிடம் கூற வாய்ப்பு கிடைத்தால் பாரம் குறையுமே!" என எண்ணினேன். ஆனால் அன்பின் பூரணத்தால் என்னை ஆளுகைச் செய்த கர்த்தர், அதுபோன்ற மனுஷீக ஏதுகரங்களை எனக்கு அனுமதிக்கவில்லை.

இச்சமயத்தில் எனக்குள் பிரவேசித்த ஒரு மாற்றத்தைக் கண்டேன். ஆம், தொடர்ந்து பல வாரங்களாக என்னைச் சுற்றி இடைவிடாது துன்புறுத்திய வெளிப்பிரகாரமான சிலுவைகள் என்னை விட்டு விலகியது!

> ஆனால் நடந்த கொடுமை என்னவென்றால், சொல்லொண்ணா துன்பங்களை விட 'சிலுவை என்னைவிட்டு விலகியதே' மகா கொடிய தண்டனையாய் எனக்குத் தோன்றியது.

அப்போது, புனித தெரசா அம்மையார் கூறிய வாசகம் என் உள்ளத்தைக் கவர்ந்துக்கொண்டது. அவர்கள் கூறியதைப்போலவே இப்போது நானும் "ஓ கர்த்தாவே நான் பாடுபடட்டும் அல்லது சாகிறேன்!" என கண்ணீரோடு ஜெபித்தேன். ஏனெனில் சிலுவை என்னை விட்டு விலகியதை நான் அனுபவித்தது பெரும் துன்பத்தை என் இருதயத்தில் ஏற்படுத்தியது. நான் கசிந்து மன்றாடி "**ஆசீர்வதிக்கப்பட்ட சிலுவையே, நீ வருக!**" என ஜெபித்தேன். என் ஜெபம் உடனே கேட்கப்பட்டது. என்னுடைய வாஞ்சையின்படி, நான் இழந்த சிலுவை மீண்டும் என்னைத் தழுவியது. அது எத்தனை பாரமா யிருந்தாலும், யாதொருவர் உதவியற்ற தனித்துவிடப்படுவ தாயிருந்தாலும், நூதனநிகழ்வுகளாக சிலுவை தரப்பட்டாலும்.... அதை நான் மலர்ந்து ஏற்றுக்கொண்டேன்!

என் தந்தையை நான் வெகுவாய் நேசிப்பது உண்டு. அவரும் என்னை அன்புடன் நேசிப்பார். ஆகிலும், நான் கடந்து வந்த ஆவிக்குரிய சூழலின் மத்தியில், என் துன்பங்களை அவரிடத்தில் ஒரு வார்த்தைகூட கூறவில்லை. ஒருமுறை என் உறவினர்கள் வீட்டிற்கு வந்தபோது, அவர்கள் முன்பாகவே நான் கடுமையாய் நடத்தப் பட்டதை பார்த்துவிட்டார்கள்! வீட்டிற்குத் திரும்பிய உறவினர்கள் எனது துன்ப சூழ்நிலையை என் தந்தையிடம் கூறிவிட்டார்கள். சில நாட்கள் கழித்து என் தந்தையின் வீட்டிற்கு நான் சென்றிருந்தபோது, வழக்கம்போல் இல்லாமல், அவர் என்னிடம் கோபமாக "உன்னை, உன் மாமியார் வீட்டார்கள் தீமையாய் நடத்தியபோது, **உன்னை பாதுகாக்கும்படி** நீ ஒரு வார்த்தையும் பேசாதிருந்தது தவறு! உன்னை நீ பாதுகாத்திருக்க வேண்டும்" என தந்தையின் பாசத்தில் கூறினார். என் தந்தைக்கு நான் சாந்தமுடன் "என்னை காண வந்த உறவினர்களிடம், என் கணவர் என்னைத் துன்புறுத்திய பேசிய கோப வார்த்தைகளைக் கூறியிருந்தால் என் வாழ்க்கையில் குழப்பம்தான் அதிகரித்திருக்கும். என் மாமியார் வீட்டார்கள் செய்திட்ட யாதொரு துன்பத்திற்கும் பதில் விளைவை என்னிடத்தில் காணாதிருக்கும் வரை நலம் உண்டாகும். யாருடைய பெலவீனங்களையும் என் கணவரின் பெலவீனத்தையும் கூட நான் வெளிப்படுத்தாதிருப்பது எல்லா வழக்கு களுக்கும் தீர்வு என்பதை ஆண்டவர் எனக்கு உரைத்திருக்கிறார். என்னை தற்காப்பது தெய்வ இளைப்பாறுதலுக்கு ஊறுவிளைவிக்கும் என்பதையும் அறிந்திருந்தேன்!" என கூறியதும் , என் தந்தை மனதுருக்கத்துடன் "நீ நன்கு செய்தாய் மகளே! உன்னை தேவன் அபிஷேகித்து நடத்துகிற பாதையில் மனஉறுதியுடன் தொடர்ந்து செல்! உன்னை மெச்சிக் கொள்கிறேன்!" என உள்ளம் பொங்க கூறினார். அதன் பின்பு அவருடைய ஜீவ காலமெல்லாம் எனக்கு என்ன துன்பம் நடந்ததென்ற வார்த்தையை ஒருமுறைகூட கேட்டதில்லை!

– மேடம் குயான்

---

## உறுதிகொண்ட நெஞ்சம் உடையவனே, கிறிஸ்தவன்!

**ந**டைமுறை கிறிஸ்தவ ஜீவியத்தையே 'ஆழம்' என இன்றைய கிறிஸ்தவர்கள் புறக்கணிக்கிறார்கள்! புதிய ஏற்பாட்டில், இயேசு கூறிய உபதேசங்களை மாத்திரமே உத்தம தாசர்கள் பிரசங்கிக்கிறார்கள்... அல்லாமல், நீங்கள் அதை ஆழம் என புறக்கணித்தால், நஷ்டம் உங்களுக்கே ஏற்படும் என்பதை மறவாதீர்கள்!

வேதாகமத்திலுள்ள அனைத்து வல்லமையான தேவ மாந்தர்களும், உறுதியான தீர்மானங்கள் எடுத்தோ அல்லது தேவனோடு உடன்படிக்கை செய்தோ ..... வாழ்ந்தவர்கள்! ஆனால், மாம்ஷீகமான கிறிஸ்தவனோ

“இது எல்லாம் பரிசேய பிரமாணத்துவம்! நான் விடுதலையாய் வாழவே விரும்புகிறேன்!” என தன்னை முற்றிலும் அர்ப்பணித்து வாழும் கட்டுப்பாட்டை காற்றில் பறக்கவிட்டு ‘தான்தோன்றித் தனமாய்’ வாழுகிறான்!!

டோசராகிய நானோ, உறுதியான தீர்மானங்களுக்குப் பின்பே, ஸ்திரப்பட நின்று, வாழ்ந்து, ஓங்கி வளர்கிறேன்! அந்த என் ஆரம்ப நாட்களில், உறுதிபூண்ட ஐந்து தீர்மானங்கள் எடுத்தேன். அது யாதெனில், **1.** பாவத்தை ‘கொடியதாய் கருதி’ எதிர்த்து நிற்பேன் **2.** எதையும் எனக்குச் சொந்தமென வைத்திருக்க மாட்டேன். அதாவது, யாதொன்றையும் எனக்கென பற்றிக்கொண்டு வாழ மறுப்பேன் **3.** என் சுயஜீவியத்தை தற்காத்துக்கொள்ள முயலமாட்டேன் **4.** ஒருவரைக் குறித்தும் பாதிப்பான செய்தியை பரப்பமாட்டேன் **5.** எனக்கென எந்த மகிமையையும் ஏற்றுக்கொள்ளமாட்டேன்! இவ்வாறாக, என் தீர்மானத்தை வேதாகமத்தில் எழுதி வைத்து, மறந்துவிடாமல் மனதில் பதித்தேன்! ஆம், நானோ அவைகளை **என் இரத்தத்தில் எழுதி** கலந்திடச் செய்தேன். இன்றைய கிறிஸ்தவமோ, தங்களுக்குப் பிரியமான அல்லது தங்களுக்குச் சாதகமான வசனங்களை எடுத்துக் கொண்டு, மற்ற வசனங்களை ஒதுக்கி விடுகிறார்கள்.

முழுவேதாகமத்தையும், நீங்கள் மனதார தழுவியிருந்தால் மாத்திரமே “முழுமையான கிறிஸ்தவனாய்” நீங்கள் மாறிட முடியும்... மற்றபடி அல்ல!

மேலும், நம்முடைய சிந்தனைகள் எப்போதும் மிகுந்த தூய்மையுடன் “தேவன் தங்கும் வாசஸ்தலமாய்” இருந்திட வேண்டும். உங்கள் சிந்தை அவ்வாறு இருந்திடவே, தேவன் விரும்புகிறார். ஆலயமாகிய நமது சரீரத்தில், நம்முடைய சிந்தனையானது அழகுபடுத்திய அலங்காரமாய் இருக்க வேண்டும்! இயேசுவின் இரத்தத்தால் உங்களின் சிந்தைகள் கழுவப்பட்டுக்கொண்டே இருந்தால் மாத்திரமே “தூய்மையான அறையில்” நீங்கள் சுகித்திருப்பீர்கள்.

வீட்டில் அமர்ந்திருக்கும் உங்களின் உடையில் ‘எண்ணெய் பிசுக்கு’ ஒட்டியிருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல! உங்கள் சிந்தனைகள் நன்றாய் இருந்தால், உங்கள் இருதயத்தின் சூழ்நிலை எப்போதும் வசந்தமாகவே இருக்கும்.

ஆகவே, உங்கள் சிந்தனைகள், உங்கள் சரீரத்தை விட்டு பிரிக்க இயலாத முக்கிய பங்கு என்பதை அறிந்து கொள்ளுங்கள். சமாதானத்தின் சிந்தை! இரக்கத்தின் சிந்தை! மனதுருகும் சிந்தை! மென்மையான குணத்தின் சிந்தை! அன்பின் சிந்தை! தேவனைப் பற்றிய சிந்தை! இயேசுவை பற்றிய சிந்தை!... ஆகிய இவையெல்லாம்

என்ன? நல்லவைகள், தூய்மையானவைகள், உயர்ந்தவைகள்! தூய ஆவியானவர் உங்களை ஆட்கொள்ள வேண்டுமா? அப்படியானால் உங்கள் சிந்தை வாழ்க்கையில் தீவிரமான சிரத்தை எடுங்கள்! இதற்கு நேர்மாறாக உங்கள் சிந்தை தட்டுத்தடுமாறி வனாந்திரத்திற்குள் செல்ல அனுமதித்து விடாதீர்கள். இவ்வாறு நீங்கள் செய்துவிட்டால், அந்த வனாந்திரத்தில், சகலவித அசுத்த மிருகங்களும் உங்கள் வனாந்திரத்தில் உலாவி, உங்கள் சிந்தை வாழ்வின் அனைத்து பகுதிகளையும் கெட்டுப்போகச் செய்துவிடும்.

சிறந்த பரிசுத்தவான்கள் யாவரிடமும் காணப்பட்ட ஓர் பொதுவான தரம் என்னவென்றால் "அவர்களின் ஆவிக்குரிய மென்மையான உணர்வுகளே ஆகும்!" இங்குதான், பரிசுத்தவான்கள் அனைவரும், ஒரு சராசரி கிறிஸ்தவனுக்கு மேம்பட்டு நிற்கிறார்கள். **தங்களுக்குள் உணர்ந்த சில சிறிய உணர்வுகளுக்கும்,** மிகுந்த வாஞ்சையுடன் செயலாற்றினார்கள். இந்த மென்மையான ஆவிக்குரிய உணர்வின் பழக்கத்தை, இந்த பரிசுத்தவான்கள் தங்கள் நீடித்த ஜீவகால பழக்கமாய் பற்றிக்கொண்டு வாழ்ந்தார்கள்!

இன்றோ, தூய வாழ்விற்குரிய பழக்கங்கள், கிறிஸ்தவர்களிடம் சீரழிந்து கிடக்கிறது. சாதாரண நடை, உடை, பேச்சில்கூட ஒருவித 'கொச்சை வாசனை' வீசுகிறது!

தேவனோடு இவர்கள் வைத்திருக்க விரும்பும் உறவு அனைத்தும் இயந்திர-காலத்து நடைமுறையாய் மாறிவிட்டது! ஏதோ ஒரு அதிகாரத்தைப் புரட்டி படிக்க வேண்டும். பின்பு கண்ணை மூடி ஒரு சிறு ஜெபத்தை ஜெபித்துவிட்டு, தன் அலுவலுக்குத் துரிதமாய் ஓடிவிட வேண்டும்! **இவன் எப்படி முழுகிறிஸ்தவனாய் மாறமுடியும்?** தனக்குள் வெற்றுகூடுதான் இருக்கிறதென்பது, அவனுக்கே தெரியும்! ஆகிலும், அதைமூடி மறைப்பதற்காக ஒரு ஆவிக்குரிய கூட்டத்திற்கு செல்லுவான்... அதன்பின்பு, மற்றொரு கிறிஸ்தவ விசேஷ கூட்டத்திற்கும் செல்லுவான். தன் ஆவிக்குரிய பொக்குத்தன்மையை மறைக்க 'பிரசங்கம் செய்யப்' போகிறவர்களும் உண்டு!? அதுபோன்ற, ஆவிக்குரிய பரிதாபமான நிலையே நம்மைச்சூழ, எங்கும் காணப்படுகிறது. இப்படியொரு காலத்தில் சிக்கியிருக்கும் மாந்தர்களில் நீங்களுமுண்டோ? நீங்கள் தேவனுடைய வழிக்கு மீண்டும் திரும்ப வேண்டுமென்றால், ஆழமான மனந்திரும்புதல் மாத்திரமல்ல ... உறுதியான தீர்மானம் எடுத்து 'உறுதி கொண்ட' ஒரு நல்ல இருதயமும் உங்களுக்கு வேண்டும்!

"தூயோனே, இன்றைய நவீன நாகரீக பழக்கத்திற்கு விலகி நில்!" என்றே கட்டளையாய் சொல்வேன். இவைகளோடு கைகோர்த்துக்

கொண்டவர்களுக்கு, கிறிஸ்துவுடன் கொண்ட தியான வாழ்க்கை கடினமாக இருப்பதோடு மட்டுமல்லாமல், 'தியானம்' என்ற சொல்கூட, சொல்ல முடியாத ஒன்றாய் போய்விடும்! தான் பரிசுத்தனாய் வாழவேண்டும் என்ற தீராத விருப்பம் கொண்டவன் மாத்திரமே, அவன் விரும்பிய பரிசுத்தத்தை பெறமுடியும்! ஆகவே, உங்களின் அனல்கொண்ட தியான வாழ்விற்கும், பரிசுத்த ஜீவியத்திற்கும், இடையூறாய் நீங்கள் காணும் "**அவிழ்ந்திருக்கும் பகுதிகளை, இறுக கட்டுங்கள்!**" மனந்திரும்புங்கள், திரும்ப செலுத்துங்கள், குடும்பத்தை ஜெபதூபமாக்குங்கள், தனிஇடம் தேடி ஜெபியுங்கள், வேதத்தில் மகிழ்ந்து திளைத்திருங்கள் ... இன்னும் நாம் என்ன சொல்லுவோம்? உங்கள் முழுமையையும், தேவ சித்தத்திற்கே ஒப்புகொடுத்து வாழுங்கள்! நாம் வாழும் இந்த கடைசி காலத்தில், 'உறுதி நெஞ்சம் கொண்ட' கிறிஸ்தவனே அன்றி, மற்றவர் நிலைநிற்பது அரிது என்பதை மனதில் கொள்ளுங்கள்!

– *A.W.* டோசர்

---

## 'அனல் குன்றிய பிரசங்கிக்கு' பிரசங்கம் ஒரு கேடா?

"**அ**னல் குன்றிய திரண்ட ஜனங்கள் கைகோர்த்து ஊழியம் செய்வதைவிட, வெகு சொற்பமான அனல் கொண்ட மாந்தர்கள் செய்திடும் ஊழியமே மிகச் சிறந்தது!" என பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சுவிஷ் நாட்டு சீர்திருத்தவாதி ஒகொலாம்படியஸ் கூறினார். ஆண்டுகள் பல கடந்தாலும் இந்த பக்தன் கூறிய வார்த்தையின் சாரம் இன்றும் நிலைத்திருக்கிறது. இன்று **பரிசுத்தம் நிறைந்த அனல் கொண்ட பிரசங்கிகளே** நமக்குத் தேவை. அன்று ஏசாயா தீர்க்கதரிசி அப்படியொரு அனல்கொண்ட பிரசங்கியாய் இருந்தார். ஆனால், அவர் தனது அறிக்கையில் "ஐயோ அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்" என கதறினார். பவுல் அப்போஸ்தலனும் அவ்வாறே "சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ!" என ஓலமிட்டார். தங்கள் ஊழிய தியாகத்தின் அளவு எவ்வளவு அதிகம் என்பதை அறியாமலே தங்களை அர்ப்பணித்துக்கொண்ட தாசர்கள் இவர்கள்! இங்கிலாந்து தேசத்தை சேர்ந்த ரிச்சர்டு பாக்ஸ்டர் என்ற தேவ பக்தன், தன்னை சோம்பேறி என குற்றம் சாட்டியவர்களுக்குப் பதில் கூறியபோது "உங்களுடைய உழைப்பிற்கு பதிலாக 'நான் இளைப்பாறும் நேரத்தை மாத்திரம் உங்களுக்குத் தந்தால்' அது உங்களுக்கு ஏற்படும் சுமையாயிருக்குமே என நான் வருந்துகிறேன்! நான் சகல பரிசுத்தவான்களிலும் மிகச் சிறியவன் என கூறுவதற்கு, எனக்குரிய

உதாரணங்கள் உண்டு. ஆகிலும், என்னை குற்றம் சாட்டுகிற உங்களுக்கு என் மனதார சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்:

ஒடியாடி நம் பட்டணத்தில் உழைக்கும் வியாபாரிகளின் உழைப்பை என்னுடைய ஊழிய உழைப்போடு ஒப்பிட்டால், அந்த வியாபாரியின் உழைப்பு எனக்கு சொகுசானது என்றே கூறுவேன்.

நான் தேவனுக்கு செய்திடும் உழைப்பை, நம் நாட்டு இளவரசர் உழைப்பிற்கு மாற்று பண்டமாக வைத்துக் கொள்ளும்படி கேட்டால், அதை மறுத்து நிற்பேன்!" என கர்ஜனையோடு கெம்பீரித்தார்.

மேலும் அவர் கூறும்போது "அவர்களின் உழைப்பில் சரீர சொகுசுக்கு இடமுண்டு. என்னுடைய உழைப்பில் என்னையே எரித்து விடுகிறேன். **அவர்கள் சொகுசான நேரங்களில் உழைப்பார்கள்! நானோ, தொடர்ச்சியான சரீர வலியிலும் உழைக்கிறேன்.** அவர்களின் குடும்ப பிக்னிக் நேரத்திற்கு பல மணிகளும் நாட்களும் உண்டு. எனக்கோ புசித்து குடிப்பதற்கு கூட அதிக அவகாசம் இல்லை. அவர்களுடைய பணியில் எந்த துன்புறுத்தலும் இல்லை! ஆனால், நான் எவ்வளவு தேவனுக்கு பணியாற்றுகிறேனோ அவ்வளவு அதிகமாய் பகைக்கப்படுகிறேன், துன்புறுத்தப்படுகிறேன்!" என தன் அந்தரங்க உண்மையை சொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

புதிய ஏற்பாட்டில் ஆத்தும ஆதாயம் செய்வதற்கு, வலிமையான பிரசங்க ஊழியம் வேண்டும்! ரிச்சர்டு பாக்ஸ்டர் தான் செய்திட்ட பிரசங்க ஊழியத்தை "மரித்துக்கொண்டிருக்கும் ஒரு மனிதன், அழிந்துகொண்டிருக்கும் திரள் கூட்டத்திற்காய் பிரசங்கிக்கிறான்!" என விழிப்புள்ள தனது ஆத்தும ஆதாய ஊழியத்தைக் குறிப்பிட்டார். இவ்வித வலிமையான ஆத்தும உரங்கொண்ட பிரசங்கிகளின் தலைமுறையே, பாவிகளின் தலைமுறைகளை நரகத்தின் கொடுவாசலிலிருந்து தப்புவிக்க வல்லவர்கள்.

ஆவிக்குரிய தன்மையில் தாழ்ந்துவிட்டு, எண்ணிக்கை அளவில் உயர்ந்திருக்கும் சபை கூட்டத்தினால் என்ன பிரயோஜனம்? **'மக்களுக்கேற்ற மனப்போங்கு'** என்ற நிலையை ஆழமாய் சபித்தவர்கள், சரியாய் செய்தார்கள் என்றே கூற வேண்டும். ஆவிக்குரிய பிரசங்கங்களுக்கு அனல் குன்றி போனவர்கள், இன்று T.V ஊழியத்தில் 'மக்களைப் பிரியப்படுத்தும்' ஆட்டுத்தோல் போர்த்தி நிற்கிறார்கள். சத்தியத்திற்கு நேர்முகமாய் நான் நின்று, பிரசங்கிகளாய் உலாவி வரும் உங்களிடத்தில் ஒரு கேள்வி கேட்கிறேன். உயர்ந்த ஆவிக்குரிய தரம் நிறைந்த பிரசங்கங்கள் செத்துவிட்டது என நீங்கள் எண்ணி விட்டீர்களோ? அனல் கொண்ட பிரசங்கங்களின் காலம் உங்களுக்கு

இழந்துபோன கலையாகிவிட்டதோ? **உங்களின் நகைச்சுவை பிரசங்கங்களை** வைத்து செத்து போன ஆவிக்குரிய மனிதனுக்கு 'ஊட்டிவிட நினைக்கிறோம்' என எண்ணும் உங்கள் அனல் குன்றிய தந்திரங்கள் கேவலமல்லவோ? இந்த கேள்விகளுக்கு ஒளிந்து கொள்ளாமல், நேர்மையாய் பதில் சொல்லுங்கள்.

– *லியோனார்டு ரேவன்ஹில்*

---

## சபையில் 'வீண்' ஆராதனையோ?

'**வீ**ணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்' என்று ஆண்டவர் ஏன் சொன்னார்? யாரைக் குறித்துச் சொன்னார்? வேதபாரகர் பரிசேயரைப் (கிறிஸ்தவர்களைப்) பார்த்தல்லவோ சொன்னார்! அவர்கள் பாரம்பரியத்தைத் தங்கள் ஆராதனைகளில் நுழைத்து, தேவனுடைய கற்பனையை மீறி நடந்தார்கள். அவர்களும் யூத ஜனங்களும் தங்கள் வாயினால் தேவனிடம் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் மாத்திரம் அவரைக் கனம் பண்ணினார்கள். அவர்கள் இருதயமோ வெகுதூரம் விலகியிருந்தது. தேவனருளிய சத்திய போதனையை அவர்கள் விட்டுவிட்டு, மனுஷர் உண்டாக்கின கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்தார்கள். ஆகையால் அவர்கள் நடத்தி வந்த ஆராதனைகள் வீண் ஆராதனைகளாயிற்று! அந்த ஆராதனைகள், அவர்களுக்கு ஆக்கினையாயிருந்ததேயொழிய ஆசீர்வாதமாயிருக்கவில்லை!!

நாம் தேவனை வஞ்சிக்க முடியாது. ஒரு மனுஷன் துயரமான சத்தத்தோடும் புலம்பலோடும் கண்ணீரோடும் இன்னொரு மனுஷனிடம் வந்து "என் பெண்சாதியும் பிள்ளைகளும் வாந்தி பேதியில் மாண்டு போனார்கள், எனக்குத் திக்கில்லை ஐயாவே!" என்று சொன்னால், நாம் பரிதபித்து அவனுக்கு உதவிசெய்ய விரும்புவோம். அவன் இருதயத்தையோ அவன் உண்மையையோ நாம் அறியோம்!

> ஆண்டவரோ ஆலயத்தில் கூடியிருக்கிற எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிறார். அவரிடம் "ஐயோ, நான் திக்கில்லாத மனுஷன்...." என்றெல்லாம் பரிதாபமாய் கூறி ஏமாற்ற ஒருவராலும் முடியாது!

நமது வாய் எவ்வளவு சத்தமாய் பாடினாலும், நமது உதடுகள் எவ்வளவு உற்சாகமாய் அவருடைய நாமத்தைப் போற்றினாலும், **உள்ளத்தில் உண்மையில்லாவிட்டால்** நமது ஆராதனைகள் வீணாகும். இதைத்தான் தற்காலத்துச் சபைகள் விசேஷமாய் கவனிக்க வேண்டும்! புராட்டஸ்டண்ட் சபைகளில் குருவானவர் வாசிக்கும் போது சபையார் மறுமொழி சொல்வது வழக்கம். கற்பனைகள்

வாசிக்கப்படும்போது: கர்த்தாவே இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும் என வாசிப்பார்கள். காலமெல்லாம் "ஏவியருளும்" என்று சொல்லிக் கொண்டிருந்தால் "கைக்கொள்வது" எப்போ? ஆண்டவர் கற்பிப்பதை நாம் செய்ய விரும்பும்போது, அவர் **உடனே** கிருபை அருளுகிறார். நாம் எவ்விதமாகப் பிதாவைத் தொழுதுகொள்ள வேண்டுமென்பதை இரட்சகர் நமக்குத் திட்டமாய் போதித்திருக்கிறார். **'நாம் ஆவியோடும் உண்மையோடும்' தொழுது கொள்ள வேண்டுமென்றே** பிதா விரும்புகிறார். இதை அநேகர் கவனிக்கிறதில்லை. ஆராதனையை நடத்துகிற இன்றைய ஊழியங்கள், இது விஷயத்தில் வெகுவாய் தவறிப் போய்விட்டார்கள். **இனிமையான பாடல்களும், அதோடு சேர்த்து உடலசைத்து ஆடுவதும், உத்தமமான ஆராதனைகள் என்று ஏமாற வேண்டாம்.** உத்தமமான ஆராதனைகள் ஆராதிக்கிறவர்களுடைய உத்தம ஜீவியத்தைப் பொருத்திருக்கிறது! அந்நாட்களில் அரும் பாடுபட்டு வாழ்ந்த பக்தர்கள் எழுதிய ஜெப புஸ்தகத்திலுள்ள சுருக்க ஜெபங்கள், மகா அருமையானவைகள். ஆனால் அவைகளை வாசிக்கிறவர்களோ, மனதிலிருந்து ஜெபிக்க வேண்டிய கஷ்டமில்லை. நமது ஜீவியம் எப்படியிருந்தால்தான் என்ன? மணி அடித்தவுடனே அங்கியைப் போட்டுக்கொண்டு, ஜெப புஸ்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டால் காரியம் முடிந்ததென்கிற துணிகரமும், அதை திரும்ப பதிலுக்கு உதட்டில் ஒப்பிக்கும் கூடியுள்ள மக்களின் துணிகரமும் ஒருக்காலும் உதவாது!

> ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டுமானால், ஆவியோடும் உண்மையோடும் ஜீவிக்க வேண்டும்.... ஆராதனையின் இந்த ஆரம்பநிலை பாடம் கூட கற்றுக்கொள்ளாமல் "இன்று எங்கள் சபையில் நல்ல ஆராதனை" எனக்கூறுவது வெட்கமல்லவா?

தேவாராதனையில் முக்கியமான விஷயம் தேவசமூகம்! 'கர்த்தர் எங்கள் ஆலயத்திலிருக்கிறார்' என்ற உறுதி இல்லாத எந்த உள்ள கிளர்ச்சியூட்டும் ஆராதனையும் வீண்! என்பதை அறியுங்கள். 'என் நாமத்தினால் எங்கே கூடுகிறீர்களோ, அங்கே நான் உங்கள் நடுவில் இருக்கிறேன்' என்று ஆண்டவர் வாக்குப்பண்ணியிருக்கிறாரே! உண்மையுள்ள ஆண்டவர், தமது வாக்குத் தவறாமல் ஆராதனை தோறும் நமது நடுவில் பிரசன்னமாகிறார்.... என்ற தெய்வ பயத்தைக்கூட சொல்லிக் கொடுக்க இன்று ஊழியர்கள் இல்லை! நாம் இதை உள்ளபடி உணர்ந்தால் நமக்குள் எவ்வளவோ பயபக்தி உண்டாயிருக்கும். இன்றுள்ள வீண் டம்பமும் அவபக்தியும்

நிர்விசாரமும் நம்மில் காணப்பட்டிருக்காது.

பெட்டிக்குள்ளிருக்கும் பட்டுகளை உடுத்திக்கொள்வதற்கும், நகைகளை எடுத்து மாட்டிக்கொள்வதற்கும், தலை நிறைய பூக்களை அடுக்குவதற்கும் 'லேட்டஸ்ட் பேஷன்' உடையோடும், சிகையோடும் புறப்படுவதற்கும் ஞாயிறு ஆராதனைகளை ஆவலோடு எதிர்பார்ப்பவர்கள் அநேகர். இதுவா பரிசுத்த அலங்காரத்தோடு கர்த்தரைத் தொழுதுக்கொள்வது?

ஒரு விக்கிரக பக்தன் பணிந்துகொள்ளும்போது, தன் மேல் வஸ்திரத்தை எடுத்துத் தன் அறையில் கட்டி, வாய்பொத்தி, கை உயர்த்திக் கும்பிட்டு, சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து வணங்குகிறான். அவ்வளவு பயபக்திகூட நமக்கில்லையோ?! ஜனங்கள் ஆராதனைக்கு வருகிற விதத்தையும், அவர்கள் ஆசனங்களில் உட்கார்ந்திருக்கிற மாதிரியையும், அவர்கள் கண்கள் அங்குமிங்கும் நோக்குவதையும், அவர்கள் எண்ணங்கள் பல காரியங்களில் செல்லுவதையும், பக்கத்திலிருப்பவர்களோடு முனுமுனுத்துப் பேசுவதையும் சிரிப்பதையும் கவனித்தால், இதன் உண்மை விளங்கும். பயபக்தி அற்றுப்போய், தேவசமூக உணர்ச்சியில்லாமற்போனால் நீங்கள் ஆண்டவருக்குப் பிரியமான ஆராதனை செய்ய முடியாது.

திருவசனம் பிரசங்கிக்கப்படுகையில் கர்த்தர் நம்மோடு பேசுகிறார் என்று கீழ்ப்படியும் சிந்தையுடன் ஆர்வமுடன் கவனிக்க வேண்டும். செய்தி நேரத்தில், சபையார் கேட்டும் கேளாமலும் அலட்சியமாய் இருப்பது நல்லதல்ல! மாறாக, மிகுந்த ஆவலுடன் பணிவான உணர்வோடு கவனித்திட வேண்டும்! ஞானப்பாட்டு, சங்கீதம், கீர்த்தனை பாடுகையில் அவைகளிலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்து கருத்தோடே பாட வேண்டும். நமது கவனம் வேறெங்கும் போகக்கூடாது. "நான் ஆவியோடு விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்" என்று பவுல் சொன்னது ஞாபகமிருக்கட்டும். இவ்வாறு தம்மை உண்மையாய் தொழுதுகொள்ளுகிறவர்களை ஆண்டவர் ஆசீர்வதிக்காமல்விடார்! ஆராதனை விஷயம், சபையாரைப் பார்க்கிலும் முன்னால் நிற்கும் ஊழியர்களையே அதிகமாய் சார்ந்துள்ளது. இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. நாம் கர்த்தருக்கு நம்மை முழுவதுமாய் ஒப்புவித்து, அவர் நமக்குள் வசிக்க இடங்கொடுத்து, அவரையே சார்ந்து பரிசுத்தமாய் வாழும் உத்தமம் **அந்த ஸ்தல சபை ஊழியனுக்கு** வேண்டும்! இது இலேசான காரியமன்று. தேவ ஊழியரில் அநேகர் "பயபக்தியான ஆராதனை" எவ்வளவு கஷ்டமான காரியம் என

*அறிந்து, அதை தள்ளிவிட்டு, எப்பொழுதும் போல* **உண்மையற்ற ஆராதனைகளை நடத்தி** *தங்கள் கடமையைக் கழித்துவிடலாம். ஆனால்.... அவர்களும் கெடுவார்கள், அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்ட சபையும் கெடும்! இன்றைய சபைகள் விழிப்படைந்து எச்சரிக்கையாய் இருப்பார்களாக!*

*– பரமானந்தம் ஐயர்*

---

## கிறிஸ்தியான் 'மெய்யான இரட்சிப்பை' கண்டடைந்தான்!

***பி****சாசின் தாக்குதலிலிருந்து காவலாளி இழுத்துக் கொள்ள, பாதுகாப்பாய் உள்ளே வந்த கிறிஸ்தியான் ஒரு வீட்டை அங்கு கண்டான். அந்த வீடு "வியாக்கியானியின் வீடாய்" இருந்தது. வியாக்கியானி என்பதின் பொருள், வேறொரு மொழியை நமது மொழிக்கு, மொழி பெயர்த்து தருவதே ஆகும். அனைத்து வேத வாக்கி யங்களும் வேறோரு மொழி என்றும், அது நமக்கு பரிசுத்தாவியினால் வியாக்கியானம் செய்யப்படாவிட்டால், வேத வாக்கியங்களை கற்றுக் கொள்ள முடியாது என்பதையும் இன்றைய திரளான கிறிஸ்தவர்கள் அறியாதிருக்கிறார்கள்!*

பழைய ஏற்பாட்டில் அடங்கியுள்ள 39 புத்தகங்களை வைத்திருந்த பரிசேயர்கள், பரிசுத்தாவியின் வியாக்கியானத்தை அறியாதபடியால், இயேசுவை பழைய ஏற்பாடு புத்தகங்கள் மேசியா என விளக்கியதை காண முடியாதவர்களாய் இருந்தார்கள்.

*ஆகவே, தனது மேசியாவை* **பெயல்செபூல்** *என அழைத்தார்கள். ஆனால், சாதாரண படிப்பறிவில்லாத பேதுரு, பரிசுத்தாவியின் நிறைவின் மூலமாய் நல்ல வியாக்கியான வெளிப்பாட்டை பெற்றிருந்தார். ஆகவே பேதுரு கூறும்போது இவர் பெயல்செபூல் அல்ல* **"மெய்யாகவே தேவ குமாரன்!"** *என அறிக்கையிட்டார்.*

*ஆகவே, இந்த வியாக்கியான வீடு, கிறிஸ்தியானுக்கு சிறந்த வியாக்கியானத்தை தந்து, தேவன் வாக்குரைத்த வாக்குதத்த பூமிக்கு நடத்தும் உதவியாளராய் இருந்தது. வீட்டிற்கு உள்ளே நுழைந்த கிறிஸ்தியானுக்கு, அபிஷேகம் நிறைந்த ஒரு மனிதன் காட்டப் பட்டான். வேத வாக்கியத்திலிருந்து அவர் கூறும் செய்திகளை கவனித்து கேட்கவும் கட்டளையிடப்பட்டான். அந்த வியாக்கி யானியானவன் எதிரே ஆசீர்வாதத்தை குறிக்கும் ஓர் கிரீடம் இருந்தது. அவருக்கு பின்னால் உலகம் தள்ளப்பட்டிருப் பதையும் கிறிஸ்தியான் கண்டான். அவருடைய கரத்தில் வேத புத்தகம் மாத்திரமே இருந்தது. கிறிஸ்து தன் சபைக்கு, போதகர்களை வரமாய் தந்துள்ளார். நாம் வேத வாக்கியங்களை புரிந்து கொண்டாலும், ஆழமான சத்தியங்களையோ கிறிஸ்துவால் அனுப்பப்பட்ட போதகர்கள் மூலமாய் அவரது*

ஜனங்களைப் போதித்து நடத்தும்படி வைத்திருக்கிறார். ஆகவே அவர் கூறும் பிரசங்க போதகங்களை கிறிஸ்தியான் கவனித்து கேட்கும்படி அறிவுறுத்தப்பட்டான்!

அந்த வியாக்கியானி கிறிஸ்தியானை ஒரு அறைக்கு கொண்டு சென்றான். அந்த அறையில் **கோபத்தால் நிறைந்த** ஒரு பையன் இருந்தான். அடுத்த அறையில் **பொறுமை நிறைந்த** ஒரு பையன் இருந்தான். கோபம் நிறைந்த பையன் உலகத்தாரை வெளிப்படுத்தினான். தனக்கு யாதொன்று கிடைக்காவிட்டால் ஆத்திரமடையும் உலகமக்கள்! மற்றொரு அறையிலிருந்த பையன் தேவனுடைய பிள்ளைகளை வெளிப் படுத்தினான். அவன் எப்போதும் பொறுமையோடும், போதுமென்கிற மனதுடனும் இருந்தான்! நாம் அனைவருமே 'கோபாவேசம்' கொண்டவர்களாகவே பிறந்தோம். ஒவ்வொரு சிறு குழந்தையும் கோபமும் பிடிவாத குணமும் கொண்டது. நாம் அனைவருமே இந்த நிலையில்தான் இருந்தோம். ஆனால் அடுத்த அறையிலிருந்த பையன் சாந்தமுடன் அமர்ந்திருப்பதைப் பாருங்கள்.

நாம் மனந்திரும்பி கிறிஸ்துவிடம் வரும்போது அவரிடம் 'இளைப்பாறுதல் பெறும்படியே' அழைக்கப்பட்டோம். தேவனிடம் அதுபோன்ற இளைப்பாறுதலைப் பெற்றவர்கள் சாந்தமும் பொறுமையும் உள்ளவர்களாய் இருப்பார்கள். இந்த நிலைக்கே நாம் யாவரும் மாறி வர வேண்டும்!

கிறிஸ்தியான் அடுத்த அறைக்குச் சென்றபோது கொளுந்துவிட்டு **எரியும் அக்கினியையும்** அதை அணைப்பதற்கு சாத்தான் **தண்ணீர் ஊற்றுவதையும்** கண்டான்! அக்கினியானது இயேசு கிறிஸ்துவின் மீதுகொண்ட அன்பையும், பிறர் மீது கொண்ட அன்பையும் குறிக்கிறது. உண்மையான சீஷன், இருதயத்தில் கொளுந்துவிட்டு எரியும் இந்த அன்பின் அக்கினியை, சாத்தான் எவ்வளவு தண்ணீர் ஊற்றினாலும், கசப்புகளை கொட்டினாலும் அக்கினியானது தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கச் செய்கிறான். ஏனெனில் அடுத்த பக்கத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் **'நிலைத்த அன்பிற்காக'** உதவும் வல்லமையை ஊற்றிக்கொண்டேயிருக்கிறார். நம்முடைய அக்கினி அவிந்து போகாமல், நாம் அன்பில் குளிர்ந்து போகாமல் இருக்க பரிசுத்தாவியானவர் எண்ணெய் ஊற்றி நமக்கு உதவி செய்து, தொடர்ந்து எரியும்படிச் செய்கிறார். ஆகவேதான், நாம் **தொடர்ச்சியாய் ஆவியின் அபிஷேகத்தை பெற வேண்டும்** என வேதம் நமக்கு புத்திச் சொல்லுகிறது. பரிசுத்தாவி, கிருபைக்கே ஒப்பிடப்பட்டிருக்கிறது. கிருபையின் ஊற்று நமக்குள் எப்போதும் தொடர்ச்சியாய் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். சத்துருவானவன், அன்பின்

அக்கினியை அவித்துவிட நாள்தோறும் தண்ணீர் ஊற்றுகிறான். ஆகவேதான், பரிசுத்தாவியின் எண்ணெய் நமக்கு நாள்தோறும் அவசியமாய் இருக்கிறது. சிலர் தனது ஆதி அன்பில் குறைந்து, கோபமும் மூர்க்கமும் அடைவதற்கு காரணம், சாத்தான் ஊற்றிய தண்ணீரால் பாதிக்கப்பட்டு அக்கினி அவர்கள் வாழ்வில் குறைய தொடங்கிவிட்டது என்ற அடையாளமேயாகும்!

அடுத்து **'மனச்சோர்வு'** என்ற மனிதனை பரிசுத்தாவியானவர் காண்பித்தார். இவன் தன் ஜீவியத்தில் பின்மாற்றமடைந்து, நம்பிக்கை இழந்து, மனச்சோர்வு என்னும் சிறைக்குள் அடைப்பட்டு போனான். இது ஒரு ஆபத்தான இடம். நாம் தோல்வியடைந்தாலும், மனந் தளராமல் மனந்திரும்பிவிட வேண்டும்.

**எந்த வீழ்ச்சியிலும் மனந்திரும்ப மனம் கொண்டவர்களுக்கு இதுபோன்ற சிறை இருப்பதில்லை. இன்றும் கிறிஸ்தவ உலகில் மனந்திரும்ப மனதில்லாமல் நிரந்தரமான சோர்விற்குள் அடைப்பட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். நாமோ எந்நிலையிலும் மனந்திரும்ப மனம் கொண்டவர்களாய் இருக்க வேண்டும். அப்போது மாத்திரமே சோர்வு நம்மை தாக்காது!**

தேவனுடைய கிருபையை அலட்சியப்படுத்தி, தங்கள் மனச்சாட்சியை உணர்வில்லாது மழுக்கிப்போட்டவர்கள் சோர்வு என்னும் இந்த சிறைக்குள் அடைப்பட்டு போவார்கள் என்பதை அறிந்து, நாம் விழித்திருக்கக்கடவோம்.

பரிசுத்தாவியின் வழிநடத்துதலை தொடர்ந்து கேட்ட கிறிஸ்தியான், இருபக்கமும் சுவர் கொண்ட ஓர் இடத்திற்கு வந்தான். அந்த நெருக்கமான வழி இரட்சிப்பின் சுவராய் இருந்தது. அதன் வழியாய் தொடர்ந்து நடக்கையில் சிலுவையின் வழிக்கு வந்தான். சிலுவையை கிறிஸ்தியான் நெருங்கி வந்ததும் அவன் தோளில் இருந்த பாவ சுமை உருண்டோடி விழுந்தது. அந்த சுமை இயேசுகிறிஸ்துவின் கல்லறைக்குழிக்குள் விழுவதைப்போன்று காட்சியளித்தது. அவனை அழுத்திய பாவம் இனி வெளிவரப் போவதில்லை. ஏனெனில் இயேசு பாவத்தையும், பாதாள கல்லறையையும் ஜெயித்தார்! புதிய உடன்படிக்கை வழங்கும் "**இனி நான் உன் பாவத்தை நினைவு கூர்வதில்லை**" என்ற பாக்கியத்தை கிறிஸ்தியான் கண்டடைந்தான். கிறிஸ்தியான் சிலுவைக்கு முன்பாக தன் கையை விரித்து நின்றான். கர்த்தாவே என் கையில் நற்கிரியை ஏதும் இல்லை. என்னை பாவியாகவே ஏற்றுக்கொள்ளும் என கூறி இரட்சிப்பை கண்டடைந்தான். இன்று அநேகர் இருப்பதைப்போல் நல்ல கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன், ஆகவே நான் பிறவியிலேயே இரட்சிக்கப்பட்டேன் என கூற முற்படாதிருங்கள்.

நல்ல கிறிஸ்தவ குடும்பமோ அல்லது நல்ல ஒழுக்கமான ஜீவியமோ கிறிஸ்துவின் இரட்சிப்பை உங்களுக்கு கொண்டு வராது. வெறுமையாய் வருகிறேன்..... **நான் ஒரு பாவி** என சிலுவையண்டையில் வந்தவர்கள் மாத்திரமே மெய்யான இரட்சிப்பை கண்டடைவார்கள்!

– மோட்ச பயணம் (சகரியா பூணன் விளக்க உரை)

---

## தேவனுடைய உண்மையை கொண்டாடும் பேறுபெற்றவர்கள்!

**'க**ர்த்தரின் கிருபைகளை' நான் என்றென்றைக்கும் பாடுவேன்! என தாவீது கூறிய முழக்கம் நம் யாவருக்கும் சொந்தமானது (சங்கீதம்.89:1). அது எப்படியெனில், துன்பங்கள் வியாகுலங்கள் மத்தியில் கடந்து செல்லும் நாம் "அவரது உண்மையை அல்லது உத்தமத்தை" ருசிப்பதேயாகும். பாடுகள் மத்தியில் "தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார்!" என மனதார அறிபவனுக்கு "கர்த்தரின் கிருபைகள்" மகிழ்வுடன் பொழிகின்றது! (வசனம்.1).

'தங்களை அண்டிய துன்ப நேரத்தில் **முறுமுறுத்து** அழிந்தார்கள்!' என வருத்தமுடன் கூறுகிறது 1கொரிந்தியர்.10:10. ஜெயத்தின் நற்செய்தியையோ அடுத்த 13 - ம் வசனம் கெம்பீரிக்கிறது. இந்த வசனத்திற்குரியவர்கள், எந்த கடின சூழ்நிலையிலும் "**தேவன் உண்மையுள்ளவர்**" என தங்கள் வாழ்வில் நிரூபித்து ருசித்தவர்கள்:

1. தங்களுக்கு நிகழ்ந்த துன்பம் 'சோதனை' மாத்திரமே....
2. தங்களுக்கு ஏற்பட்ட இந்த 'சோதனை' எல்லா மனுஷருக்கு முரிய சகஜமானதே, என தாழ்மையாய் ஏற்றுக்கொண்டார்கள்!

இந்த வசனம் கூறுகிறபடி இவ்வாறு ஏற்றுக்கொண்டவர்களே, "தேவன் மீது மாறாத விசுவாசம்" கொண்டவர்கள்! இந்த பணிந்த ஆவியைக் கொண்ட இவர்களுக்கே 'தேவன் உண்மையுள்ளவராய்' தன்னை விளங்கச் செய்கிறார் என அந்த வசனத்தின் மையப்பகுதி எக்காளமிடுகிறது:

1. திராணிக்கு மேலாக தம்முடையவர்கள் சோதிக்கப்பட தேவன் இடங்கொடாதிருந்தார்!
2. சோதனையை தாங்குவதற்கு அவர்களுக்கு பெலன் தந்தார்!
3. சோதனையிலிருந்து ஜெயத்தையும் மனதார வழங்கினார்!

இந்த அவரது உண்மையை தங்கள் சொந்த பிள்ளைகளுக்கு அறிவித்து, தலைமுறை தலைமுறையாய் தன் சந்ததிகளுக்கும் அறிவித்து மகிழ்ந்த இவர்கள் பாக்கியவான்கள் மாத்திரமல்ல, தங்கள் வாழ்வில் **கர்த்தரின் கிருபைகளை** ஏராளமாய் பெற்று, பாடி கொண்டாடியவர்கள் (சங்.89:1). அல்லேலூயா!

– T.ரத்தினகுமார்

# பிளான்டீனா,

## கிறிஸ்துவுக்கு தியாக பலியான அடிமைபெண்!

(கி.பி.177)



கி.பி 177 – ம் ஆண்டு பிரான்ஸ் தேசத்தின், லியான்ஸ் பட்டணத்திற்கு முதன் முறையாக கிறிஸ்தவ விசுவாசம் பிரவேசித்தது. சிமிர்னா சபையின் பாலிகார்ப், லியான்ஸ் பட்டணத்திற்கு போதினஸ் என்பவரை மிஷனெரியாக அனுப்பி வைத்தார். இந்த போதினஸ் கிறிஸ்துவின் சபையை மிகுந்த தெய்வ பயத்துடன் அந்த பட்டணத்தில் கட்டி எழுப்பினார். சபை பெருகி வளர்ந்தவுடன், கிறிஸ்தவர்களுக்கு துன்பங்கள் ஒவ்வொன்றாய் வரத் தொடங்கின. கிறிஸ்தவர்களைக் கண்டால் கூட்டமாய் வந்து கல்லெறிவதும், அடிப்பதும், அவர்களை கொள்ளையிடவும் செய்தார்கள்.

ரோமாபுரி பேரரசின் திருநாளை ஆகஸ்ட் 1ம் தேதி கொண்டாடுவர். அப்போது ரோம பந்தயதிடலில் பேரரசரோடு பொது மக்கள் கூடி வருவார்கள். மக்களை மகிழ்விக்க குத்து சண்டை வீரர்கள், மல்யுத்த வீரர்கள், மிருகங்களோடு யுத்தம் செய்யும் வீரர்கள் அதிக பணம் கேட்கின்றபடியால் "கிறிஸ்தவர்களை துன்புறுத்தும் கொடிய செயல்கள்" அங்கே நடத்தி நிறைவேற்றப்பட்டது. அந்த வகையில் பிளான்டீனா என்ற ஒரு அடிமைப்பெண் ஆகஸ்ட் 1ம் தேதி சித்ரவதைக்கு நியமிக்கப்பட்டாள். அவளை இழுத்து வந்து, பந்தயதிடலின் நடுவில் இருந்த ஒரு பெரிய மரத்தூணில் தலைகீழாய் தொங்கவிட்டு, அவளை தின்பதற்கு கொடிய விலங்குகளை அவிழ்த்து விட்டார்கள். சிலுவையில் தொங்குவது போன்று காணப்பட்ட பிளான்டீனா, உரத்த சத்தமாய் தன் இரட்சகரிடம் ஜெபம் செய்தாள். திடலில் கூடியிருந்த விசுவாசிகள், அவளின் விசுவாச தைரியத்தை கண்டு பெலனடைந்தார்கள். சீறி வந்த ஒவ்வொரு விலங்குகளும், பிளான்டீனா அருகில் வந்து அவளை முகர்ந்து பார்த்துவிட்டு அவளை சிறிதுகூட தீண்டாமல் சென்றுவிட்டன. அது, இயேசுகிறிஸ்து சிலுவையில் பெற்ற வெற்றியைப் போல தோன்றியது. அவளை மீண்டும் சிறைக்கு அனுப்பி விட்டு, கடைசி நாளில் மீண்டுமாய் அவளை திடலுக்கு கொண்டு வந்தார்கள். கூடியிருந்த கிறிஸ்தவர்களுக்கு அவள் சவாலிட்டு "உங்கள் விசுவாசத்தில் தைரியமாய் இருங்கள்" என உரத்த சத்தமாய் கூறினாள். அவளை கண்டவர்கள் "பிளான்டீனா மிருகத்திற்கு விருந்தாக வந்தவளைப்போல் காணப்படாமல், தன் கர்த்தர் கொடுக்கும் ராஜ போஜனத்திற்கு புறப்பட்டு வந்தவளைப்போல் காணப்பட்டாள்" என அறிக்கை செய்தார்கள். கடைசி நாளில் நடந்த அந்த நிகழ்ச்சியில் பிளான்டீனாவை, முதலாவது வாரினால் அடித்தார்கள்! பின்பு தகிக்கும் உஷ்ணமான ஆசனத்தில் வைத்து அவள் உடலை சுட்டார்கள்! பின்பு கொஞ்சம் அவிந்துபோன அவள் சரீரத்தை ஒரு வலைப்பைக்குள் வைத்து, அவிழ்த்து விட்ட காட்டு எருமைகள் முன்பாக தூக்கி எறிந்தார்கள். அந்த முரட்டு காளைகள், அந்த வலைப் பையிலிருந்த பிளான்டீனாவை வெறியுடன் பாய்ந்து குத்திக் கிழித்து விளையாடியதைக் கண்டு திடலில் சூழ்ந்திருந்த மக்கள் கரகோஷம் செய்தார்கள். ஆகிலும், பிளான்டீனாவை திடலில் எறிவதற்கு முன்பாக, ரோம தேவதைகளை வணங்குவதற்கு மறுத்து "நான் ஒரு கிறிஸ்தவள் என் மூலமாய் யாதொரு தீங்கும் நான் பிறருக்கு செய்ததில்லை" என்ற அவளின் சாட்சியின் சத்தம் திடலில் கூடியிருந்த எல்லோருடைய காதுகளிலும் ஒலித்து கொண்டே இருந்தது!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## சிகரம் ஏறத்துடித்த வாலிபன்.... பாதாளம் வீழ்ந்து நொறுங்கினான்!

என் பெயர் சியாம் தாமாங்! தேவ இரக்கத்தால் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டவன்! மலை ஏற்ற வீரனான நான், இமயமலைகளிலுள்ள சிகரங்கள் பலவற்றிற்கும் மேல் நாட்டு மலை ஏற்ற குழுக்களுடன் அவர்களின் வழிகாட்டியாகவும், ஆலோசனைகாரனாகவும், மலை ஏற்ற வீரனாகவும் சென்றிருக்கின்றேன். இப்படியாக, ஆஸ்திரேலியா குழு ஒன்று எவரெஸ்ட் சிகரத்துக்கு அருகிலுள்ள "அமா டாப்ளம்" என்ற 6863 மீட்டர் உயரமுள்ள சிகரத்தை எட்டிப்பிடிக்க புறப்பட்டுச் சென்றது. அந்தக் குழுவை நான் வழிநடத்திச் சென்றேன்.

ஒரு நாள் "அமா டாப்ளம்" சிகரத்தின் அருகில் வந்துவிட்ட நாங்கள், எங்கள் கூடாரங்களில் தங்கியிருந்தோம். அப்பொழுது சூரியன் தனது ஒளி கிரணங்களை மேற்கண்ட சிகரத்தில் வீசி அந்த சிகரத்தை அழகும், அலங்காரமுமாக்கிக் கொண்டிருந்தது. எங்கள் குழுவிலிருந்த ஆஸ்திரேலிய வாலிபன் அந்த சிகரத்தின் அழகால் முற்றும் கவரப்பட்டு விட்டார். அதில் அவர் சொக்கிப்போனார் என்றே சொல்ல வேண்டும். அவர் தனது காமிராவால் அந்த அழகிய சிகரத்தினை படமெடுக்க முயன்றார். சிகரத்தின் முழுமையையும் படமெடுக்க முயற்சித்த அவர் அதற்கு வசதியாக பின் நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார். ஆனால், அவருக்குப் பின்னால் இடம் கிடையாது. செங்குத்தான பெரிய பாதாள பள்ளம்தான் இருந்தது. அந்த வாலிபனோ, அதைப் பொருட்படுத்தாமல் மெதுவாக நகர்ந்து, நகர்ந்து பாறையின் கொடு பாதாள விளிம்பிற்குச் சென்ற சமயம், நான் உரத்த குரலில் எச்சரிக்கை செய்தேன்! அதையும் அவர் ஏற்றுக்கொள்ளாமல் சற்றுதான் நகர்ந்தார்.... அவ்வளவுதான், அவர் சடுதியில் மல்லாக்க கொடு பாதாளத்தில் விழுந்து நொறுங்கிப்போனார்.....

நல்ல திடகாத்திரமான, இளவயதான அந்த அன்பான வாலிபன் க்ஷணப்பொழுதில் இந்த உலகத்தை விட்டே போய்விட்டான். அவனின் உருக்குலைந்த சரீரத்தை கீழே இறங்கி எடுக்க யாருமிலர். கடைசியாக, நானே அந்தக் காரியத்தை பொறுப்பெடுத்து பெரிய கயிறுகளின் உதவியால் கொடு பள்ளத்தினுள் இறங்கி, அந்த சிதைந்து போன சரீரத்தை பெரிய கம்பளிப்போர்வைகளில் வைத்து மேலே கொண்டு வந்தேன். என் வாழ்வில் அந்த நிகழ்ச்சி என்றும் மறக்க முடியாத ஒன்றாகும்!

ஆண்டவர் இயேசுவின் இரட்சிப்பின் அழைப்புக்கு செவிகொடுத்து, அவரது அடைக்கலப் பட்டணத்துக்குள் வரத்தாமதிக்கும், மற்றும் கீழ்ப்படிய மறுத்து பின் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் மாந்தர் யாவரின் இறுதி முடிவும், இவ்விதமாகவே சடுதியாக நேரிட்டுவிடும் என்பதை மேற்கண்ட சம்பவம் நமக்கு நினைப்பூட்டுகின்றது அல்லவா? இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம், இதோ இப்பொழுதே இரட்சண்ய நாள்! (2கொரி. 6:2).

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.